


தனி பிரதி ரூ.10/-

Single Copy Rs.10/-

ANNUAL SUBSCRIPTION Rs.120/-




# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

**TAMIL & ENGLISH MONTHLY**


| கதிர் 49 | பாரிப்பு 10 | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜூன் 2018 |
|---|---|---|---|
| KADHIR 49 | PAARIPPU 10 | THIRUVALLUVAR AANDU 2049 | JUNE 2018 |


## தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொறியாளர் C.கணபதி அவர்கள் பணிஓய்வு பாராட்டு




நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை

சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org

email id : tneapwd@yahoo.co.in

# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்






பொதுச் செயலாளர் மடல்

மடல் - 10 (2017 - 2018)



# தொடரும்

## நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

அரசாணை எண்.1 சம்பந்தமாக உச்ச நீதி மன்றம் நமக்கு சாதகமாக வழங்கிய தீர்ப்பின் தொடர்ச்சியாக, உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் ஊட்டுப் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களை சேர்க்காமல் இருக்கும் வண்ணம், நமது சகோதர சங்கம் உச்ச நீதி மன்றத்தில் தொடுத்த புதிய வழக்கு கடந்த 09.05.2018 அன்று மாண்புமிகு நீதியரசர் அருண் மிஸ்ரா அமர்வில் தள்ளுபடி செய்யப்பட்டது.

7வது ஊதிய கமிஷனில் உள்ள ஊதிய முரண்பாடுகளை களைவதற்காக திரு. சித்திக் IAS அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஒருநபர் குழுவிற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன்னுடைய கருத்துருவை 14.05.2018 அன்று நேரிலும், மின்னஞ்சல் மூலமாகவும் சமர்ப்பித்தது.

உயர்நீதி மன்றத்தின் விடுமுறை முடிந்து 04.06.2018 அன்று மீண்டும் உயர்நீதி மன்றம் செயல்பட ஆரம்பித்துள்ளது. உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான வழக்கை விசாரணைக்கு கொண்டு வந்து விரைவில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்று தர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

தமிழக அரசு, அரசு ஊழியர்களுக்கு செலவாகும் செலவினத்தை குறைப்பதற்காக, தேவையற்ற பதவிகளை அடையாளம் கண்டு அந்த பதவிகளை ஒழிப்பது, சில பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் (Contract basis) பணி அமர்த்துவது, புதிய பணிநியமனம், பதவி உயர்வு வழங்காமல் தமிழக

அரசின் பல்வேறு துறைகளில் தேவைக்கதிகமாக உள்ளவர்களை வேறு துறைக்கு மாற்றுவது போன்றவற்றை ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி திரு.S.ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் பணியாளர் சீரமைப்பு குழு (Staff Rationalisation Committee) அமைத்துள்ளது. இந்த குழுவில் M.A.சித்திக் ஐ.ஏ.எஸ் அவர்களும் இடம் பெற்றுள்ளார். இந்த குழு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் கருத்துக்களை 05.06.2018க்குள் தெரிவிக்குமாறு 01.06.2018 அன்று கடிதம் அனுப்பியது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன்னுடைய கருத்தை 05.06.2018 அன்று நேரடியாகவும், மின்னஞ்சல் மூலமும் சமர்ப்பித்துள்ளது.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588, 988 444 98 97
**E.mail: d.murugavelsivan@gmail.com**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் பொறியாளர் S.லீலாவதி உதவி செயற்பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமண நன்கொடையாக ரூ.5000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை இணைச் செயலாளர் பொறியாளர் K.ஆதிச்செல்வி இளநிலைப் பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமண நன்கொடையாக ரூ.5000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

# 19.05.2018 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 19.05.2018 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை பொறியியல் இல்லத்தில் மாநிலத் தலைவர் பொறியாளர் சி. கணபதி அவர்கள் தலைமையில், மாநில பொதுச் செயலாளர் த. முருகேசன் அவர்கள் முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். சென்னை கிளையின் சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் S.சண்முகானந்தன் அவர்களும், மையச் சங்கம் சார்பாக பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் N.புண்ணியகோடி அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் C.கணபதி அவர்கள் தன்னுடைய உரையில் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மாநில துணைத் தலைவர் பொறியாளர் S.லீலாவதி அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் சென்னை கிளையின் சார்பாக பொன்னாடைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

சென்ற மையச்செயற்குழு கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்து அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் அவைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற்றார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் பொறியாளர்கள் T.வெங்கடேசன் செயலாளர் தருமபுரி கிளை, T.ரவிச்சந்திரன் பொருளாளர் திண்டுக்கல் கிளை, V.சிவப்பிரகாசம் பொருளாளர் தஞ்சாவூர் கிளை, G.அண்ணாமலை செயலாளர் புதுக்கோட்டை கிளை, G.விஜயசேகர் இணைச்செயலாளர் கோவை - பொள்ளாச்சி கிளை, மூத்தப் பொறியாளர்கள் C.P.சண்முகம், T.P.பாலசுப்ரமணியம், M.பலராமன், N.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் விரிவான விளக்கம் அளித்தார்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் நிதிச்செயலாளர் பொறியாளர் K.கமால்தீன் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாததால் அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்களால் 01.08.2017 முதல் 30.04.2018 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெறப்பட்டது.

பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் N. புண்ணியகோட்டி அவர்கள் 01.08.2017 முதல் 30.04.2018 முடிய

உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

வெளியீட்டுச்செயலாளர் பொறியாளர் S.K. கருப்புச்சாமி அவர்கள் பொறியியல் கதிர், நாட்காட்டி, நாட்சுவடி, குறித்து உரையாற்றினார். அதை தொடர்ந்து மண்டல செயலாளர்கள் பொறியாளர்கள் K.சேரலாதன் வடக்கு மண்டல செயலாளர், S. எட்வின்ஜெயராஜ் தெற்கு மண்டல செயலாளர் ஆகியோர் கிளைச்சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

சென்னை பொறியியல் இல்லம் பராமரிப்பு குறித்து இல்லக் காப்பாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் உரையாற்றினார்.

அடுத்த மாநில பொதுக்குழுக் கூட்டம் கிழக்கு மண்டலத்தின் சார்பாக நடத்துவது எனவும் இடம், தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சென்னை கிளையின் சார்பாக கிளைச் செயலாளர் பொறியாளர் A. மணிமாறன் அவர்களும் மையச்சங்கத்தின் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்களும் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மையச் செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக (தவறாக ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து) பதவி பெயர் மாற்றம் செய்தது சம்பந்தமாக அரசிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. இந்த கோப்பு அரசிடம் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளது. இந்த கோப்பு 20.02.2018க்குள் முடிவுக்கு வரவில்லையென்றால் வழக்கு தொடர்வது என தீர்மானிக்கப்படுகிறது.

2. பொதுப்பணித்துறையில் நிர்வாகம் மேம்பட தமிழ்நாடு பொறியியல் பணிவிதிகளில் (Tamilnadu Engineering Service Rules) உள்ளது போல், மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல், மத்திய அரசில் உள்ளது போல் ஏற்கனவே தமிழக பொதுப்பணித்துறையில் கடைபிடித்தது போல் உதவி செயற்பொறியாளர் (Assistant Executive Engineer) பதவிகளை நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்ய வேண்டுகிறோம்.

3. விதிகளில் உள்ளது போல் உதவி செயற்பொறியாளர் பதவியை நேரடி நியமனம் மூலம் நிரப்ப வலியுறுத்தி வழக்கு தொடர்வது என தீர்மானிக்கப்படுகிறது.

4. நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள விதித்திருத்த கோப்புகளை விரைந்து முடிக்க அரசை வலியுறுத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

5. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு, நீர்வள ஆதாரத்துறை, கட்டிடப் பிரிாவு என தனித்தனியாக காலி பணியிட மதிப்பீடு (Estimate of vacancies) தயாரித்து உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என வலியுறுத்தி தீர்மானிக்கப்படுகிறது.

6. தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் விதித்திருத்த கோப்பு காணவில்லை என்று தெரியவருகிறது இதற்காக மாநில செயற்குழு தன் கண்டனத்தை பதிவு செய்கிறது. கோப்பை தொலைத்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

7. அரசாங்கத்திடமிருந்து கூடுதல் விவரங்கள் கேட்டு தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு அனுப்பப்படும் கோப்புகளுக்கு பதில் அனுப்பாமல் வருடக் கணக்கில் கோப்புகள் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தேங்கி கிடக்கிறது. இதற்கு மாநில செயற்குழு தன் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. பதில் அனுப்பாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

8. தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை பொறியியல் இல்லத்தை புதுப்பிக்கும் பொறுப்பை சென்னை கிளையின் தலைவர் பொறியாளர் S.சண்முகானந்தன் அவர்களிடம் ஒப்படைப்பது என தீர்மானிக்கப்படுகிறது.


## கண்ணீர் அஞ்சலி




## பொறியாளர். எஸ்.இராஜன் பிரேம்குமார்


பொறியாளர் எஸ்.இராஜன் பிரேம்குமார் அவர்கள் 11.05.2018 அன்று மாலை கோயம்புத்தூரில் இயற்கை எய்தினார். பொறியாளர் எஸ்.இராஜன் பிரேம்குமார் அவர்கள் சங்கத்தின்பால் தீவிர பற்றுக் கொண்டவர். அன்னாரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தமிழ்நாடு பொறியியல் சங்கம் பிரார்த்திக்கிறது.

## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்











# மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்







மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்









IN THE SUPREME COURT OF INDIA

CIVIL APPELLATE JURISDICTION

M.A. NO.1166 of 2018

(D.No. 15978 of 2018)

WITH

INTERLOCUTORY APPLICATION NO.62517/2018

IN

CIVIL APPEAL NO.995 OF 2009

ASSOCIATION OF ENGINEERS ... APPELLANT(S)

VS.

GOVERNMENT OF TAMIL NADU & ORS. ... RESPONDENT(S)

O R D E R

Delay condoned.

No case is made out to entertain the appeal filed against order dated 14.12.2017 passed by the Learned Registrar.

M.A.No.1166/2018 stands rejected.

..........................J.

[ARUN MISHRA]

..........................J.

[UDAY UMESH LALIT]

New Delhi;

MAY 9, 2018

ITEM NO.28 COURT NO.9 SECTION XII

S U P R E M E C O U R T O F I N D I A

RECORD OF PROCEEDINGS

MA 1166/2018 in C.A No(s).995/2009

ASSOCIATION OF ENGINEERS Petitioner(s)

VERSUS

GOVERNMENT OF TAMIL NADU & ORS Respondent(s)

(FOR ADMISSION and IA No.62517/2018-APPLICATION FOR CONDONATION OF DELAY IN FILING APPEAL CHALLENGING THE ORDER OF THE LD. REGISTRAR and IA No.62520/2018-APPEAL AGAINST REGISTRARS ORDER XV RULE 5 )

Date : 09-05-2018 This matter was called on for hearing today.

CORAM :

HON'BLE MR. JUSTICE ARUN MISHRA

HON'BLE MR. JUSTICE UDAY UMESH LALIT

For Petitioner(s) Mr. P.S.Patwalia,Sr.Adv.
Mr. Pranav Sachdeva, AOR
Mr. N. Subramaniyan,Adv.
Ms. Neha Rathi,Adv.
Ms. Natasha Dalmia,Adv.
Ms. Harshika Verma,Adv.

For Respondent(s) Mr. K. V. Vijaya Kumar,Adv.
Ms. Maitreyee Mishra,Adv.
Mr. K.V. Ramkumar,Adv.

UPON hearing the counsel the Court made the following

O R D E R

M.A.No.1166/2018 stands rejected in terms of the signed order.

(B.Parvathi) (Jagdish Chander)
Court Master Branch Officer

(Signed order is placed on the file)

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.

வழங்கும்

# பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டம் - 2018

**10 அல்லது 12 தேறியவர்களுக்கு மட்டும்**

**விண்ணப்பப்படிவம் (தெளிவாக எழுதவும்)**

1. மாணவர் / மாணவியர் பெயர் ..........................................
2. தந்தை / பாதுகாவலரின் பெயர் ..........................................
3. உறுப்பினர் எண் ..........................................
4. முகவரி ..........................................
5. மாணவர் / மாணவி உறுப்பினருக்கு உறவுமுறை ..........................................
6. 10 அல்லது 12-ம் வகுப்பு தேர்வில் மொத்த மதிப்பெண்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) ..........................
7. 10 அல்லது 12-ம் வகுப்பில் சேர்ந்த ஆண்டு மாதமும் ....................
8. 10 அல்லது 12-ம் வகுப்பில் தேர்வில் வெற்றி பெற்ற மாதம் ஆண்டு முதல் முயற்சியிலேயே தேர்வு பெற்றவரா? ஆம் / இல்லை ..................

**சங்க உறுப்பினர் கையொப்பம்** **மாணவ / மாணவி கையொப்பம்**

## சான்றிதழ்

பொறியாளர் ................................ கிளைச் சங்கத்தின் ஆயுள் கால உறுப்பினர் எண் ............... / சாதாரண உறுப்பினர் எண் .................................... தொடர்ந்து 2016, 2017 மற்றும் 2018ம் ஆண்டில் உறுப்பினர் கட்டணம் / சிறப்பு நன்கொடை செலுத்தி உறுப்பினராக இருந்துள்ளார். மேற்படி உறுப்பினரின் மகன் / மகள் / சகோதரர் / சகோதரி 2018-ம் வருடம் மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்பு தேர்வில் முதல் முறையிலேயே ......................... மதிப்பெண்களை பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார் என சான்றளிக்கிறோம்.

| உறுப்பினர் தொகை | இரசீது எண் | தேதி |
|---|---|---|
| 2016............................ | ........................... | ................... |
| 2017............................ | ........................... | ................... |
| 2018............................ | ........................... | ................... |

(உரிய விபரங்களை சரி பார்த்துக் கிளைச் செயலாளர் சான்றிதழ் அளித்தல் வேண்டும்)

செயலாளர்.......................................................கிளை

## தலைமைச் சங்கம்

மாணவர் / மாணவியின் பெயர் ..........................................

சங்க உறுப்பினர் பெயர் ..........................................

உறவு முறை ..........................................

2018ம் வருட மார்ச்சில் நடைபெற்ற 10 அல்லது 12 வகுப்புத் தேர்வில் மதிப்பெண்கள் பெற்று .......................................................பரிசாக ரூ...........................பெறுகிறார்.

**பொதுச் செயலாளர்** **தலைவர்**

# தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5.

## பொறியாளர் எஸ். கணபதி பொறியாளர் எஸ். முருகானந்தம்

## கல்விப் பரிசு திட்டம் - 2018

(10-ம் வகுப்புக்கும், 12-ம் வகுப்புக்கும் தனித் தனியாக)

| 10-ம் வகுப்பு | 12-ம் வகுப்பு |
|---|---|
| ❖ முதல் பரிசு ரூ. 3000/- வீதம் | ❖ முதல் பரிசு ரூ.5000/- வீதம் |
| ❖ இரண்டாம் பரிசு ரூ. 2000/- வீதம் | ❖ இரண்டாம் பரிசு ரூ. 3000/- வீதம் |
| ❖ மூன்றாம் பரிசு ரூ. 1000/- வீதம் | ❖ மூன்றாம் பரிசு ரூ. 2000/- வீதம் |

**திட்டம்:**

நமது சங்கத்தின் முன்னாள் மூத்த தலைவர்கள் பொறியாளர் எஸ்.கணபதி மற்றும் பொறியாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் சங்கத்திற்கு ஆற்றிய அருந்தொண்டினைப் பாராட்டி பெருமைப்படுத்தும் வகையில் 1976 மற்றும் 1980-ம் ஆண்டு முதல் இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இச்சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் அவரை சார்ந்த சகோதர / சகோதரிகளின் கல்வி நலனுக்காகவும் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

2018-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 10-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக ரூ. 1000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

2018-ம் வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் திங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற 12-ம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற சங்க உறுப்பினர்களை சார்ந்த கல்வி கற்கும் ஒருவருக்கு முதல் பரிசு ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இரண்டாம் பரிசு ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) மூன்றாம் பரிசாக

ரூ. 2000/- (ரூபாய் ஒரு இரண்டாயிரம் மட்டும்) வீதம் இந்த கல்விப் பரிசு திட்டங்களும் வழங்கப்படும். பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் நிர்ணயிக்கப்படுவர்

## தகுதி, கலந்து கொள்ளும் முறை மற்றும் விதிகள்:

1. 10-ம் வகுப்பு அல்லது 12-ம் வகுப்புகளில் முதல் தடவையிலேயே தேர்வு பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

2. தகுதியுடையோர் விண்ணப்பத்தினை, அதற்கென முன் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து மூடி முத்திரையிட்டு கவரின் மேல் கல்விப் பரிசுத் திட்டம் பெயரைக் குறிப்பிட்டு தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5 என்ற முகவரியிட்டு ரூ. 50 கிளையில் செலுத்தி உரிய ரசீதினை இணைத்து அனுப்ப வேண்டும்.

3. மதிப்பெண் பட்டியல் நகல் ஒன்று கிளைச் சங்க செயலரால் மூல மதிப்பெண் பட்டியலுடன் ஒப்பிடப்பட்டு, சான்றிடப்பட்டு இணைத்து அனுப்ப வேண்டும்.

4. மேற்கூரிய வண்ணம் முழுமையாக நிரப்பப் பெற்ற படிவம் 31.07.2018-க்குள் மூடி முத்திரையிட்ட (Sealed) உறையில் சென்னையிலுள்ள தலைமைச் சங்கத்திற்கு நேரடியாக வந்து சேர வேண்டும். 31.07.2018 க்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. விண்ணப்பதாரரின் பெற்றோர் / பாதுகாவலர் இச்சங்கத்தில் தொடர்ந்து 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் உறுப்பினராக சந்தா செலுத்திய இரசீதுகளின் எண்கள் பற்றிய விவரத்தினை கிளைச் செயலாளர் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். ஆயுள் உறுப்பினராக இருப்பின் செலுத்திய சிறப்பு நன்கொடை அதற்கான விவரங்களும் தெரிவிக்கப்பட வேண்டும். மேற்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புகின்ற முழு பொறுப்பு உறுப்பினர்களையே சாரும். குறிப்புகள் முழுமையாக விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அந்த விண்ணப்பம் தொடர்பாக கிளைச் சங்க பொறுப்பாளர்களையோ அல்லது அந்த உறுப்பினர்களிடமிருந்தோ எந்த விளக்கமும் பெறாமலேயே நேரிடையாக நிராகரிக்கப்படும் என்பதையும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

6. விண்ணப்பத்துடன் மாணவ / மாணவியரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைத்து அனுப்புதல் வரவேற்கத் தகுந்தது மட்டுமல்ல, மிக அவசியமானது கூட, பரிசு பெறுவோரின் புகைப்படங்கள் பின்னர் கதிரில் வெளியிடப்படும்.

**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 243 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 31.05.2018)

| வ.எண் பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|
| 1. C.T. சங்கர் | தலைமைப் பொறியாளர் |
| 2. T. முருகுசுப்பிரமணியன் | தலைமைப் பொறியாளர் |
| 3. M. மலையரசன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 4. M. பிரேம்சந்தர் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 5. P. அமீர் ஹம்சா | கண்காணிப்புப் பொறியாளர் |
| 6. M. சிவசுப்ரமணியன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 7. P. ரவி | கண்காணிப்புப் பொறியாளர் |
| 8. S. அழகேசன் | செயற் பொறியாளர் |
| 9. K. ராம்பிரசாத் | செயற் பொறியாளர் |
| 10. A.T. பழனிசாமி | செயற் பொறியாளர் |
| 11. R. முருகசாமி | செயற் பொறியாளர் |
| 12. S. அசோக்குமார் | செயற் பொறியாளர் |
| 13. K. வெள்ளிமலை | உதவி செயற் பொறியாளர் |
| 14. A. சௌந்தரராஜ் | உதவி செயற் பொறியாளர் |
| 15. L. பிலோமின்ராஜ் | உதவி செயற் பொறியாளர் |
| 16. R. பன்னீர் செல்வம் | உதவி செயற் பொறியாளர் |
| 17. S. நிஜாம் அலி கான் | உதவி செயற் பொறியாளர் |
| 18. N. செல்வராஜன் | உதவி செயற் பொறியாளர் |
| 19. D. சங்கர சுப்பிரமணியன் | உதவி செயற் பொறியாளர் |
| 20. A.S. நாகராஜன் | உதவி செயற் பொறியாளர் |
| 21. K. சுப்பிரமணியன் | உதவி செயற் பொறியாளர் |
| 22. K.G. கோபால் | முதுநிலை கொதிகலன்கள் உதவி இயக்குநர் |
| 23. V. மதிவாணன் | உதவி இயக்குநர் (புவி பௌதீகம்) |
| 24. N. சுப்புராஜ் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 25. S. தில்சாத் பேகம் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 26. P. சுப்புலெட்சுமி | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 27. R. பாலசுப்ரமணி | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 28. S. செல்வராஜ் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 29. S. மல்லிகா | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 30. G. தென்னரசன் | கணினி திட்டமிடுபவர்(Computer Programmer) |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எஸ்.கே. பிரபாகர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் முன்னாள் பொறுப்பாளர் பொறியாளர் R.பன்னீர்செல்வம் உ.செ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு மையச்சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் A.சௌந்தரராஜன் உ.செ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு மையச்சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



அருள்மிகு முருகன் துணை : அருள்மிகு நந்தீஸ்வரர் துணை



# மன்றல் அழைப்பிதழ்



**நிறையன்பு நெஞ்சத்தீர்,**

செந்தில் வேலவன் செவ்வேல் துணை கொண்டு, சர்வமும் வெற்றி என மகிழவைக்க வரும் மங்களகரமான விளம்பி ஆண்டு இளவேனில் காலம் கழிந்த முதுவேனில்காலமாம், மகத்தான ஆனித் திங்கள் 03 ஆம் நாள் **(17.06.2018)** ஞாயிற்றுக்கிழமை சேவல் தன் செவ்வாய் திறக்க, செங்கழுநீர் வாய் நெகிழ, செக்கர் வானம் சேயிழை முகம் எனத் திகழ, செஞ்ஞாயிறு செங்கதிர் பரப்பிச் செழிந்தோங்கி எழும், சதுர்த்தி திதியும் பூசம் நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 12.00 மணிக்குள் கடக லக்கினத்தில்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், காரிச்சாங்குடி,
தெய்வத்திரு. தைலான் - முல்லையம்மாள் அவர்களது மகன் வழிப் பேரனும்,
பெருகவாழ்ந்தான் காந்தாரி .திரு. N.M. பரிமணம் - காந்திமதி அவர்களது
மகள் வழிப் பேரனும், தெய்வத்திரு. T.துரைக்கண்ணு - நலமுடன் வனிதா அவர்களது
குமாரனுமான திருவளர்ச்செல்வன்

**Er. D. பாலமோகன்,** B.E., M.B.A.,
Hitachi Johnson Controls, Bangalore.

மதுரை வடக்கு தாலுக்கா, செல்லூர். தெய்வத்திரு. M.நந்தி - நாகம்மாள் அவர்களது
மகன் வழிப் பேத்தியும், அம்மையநாயக்கனூர், தெய்வத்திரு. T.P.சுப்பையா ஆசிரியர் -
நலமுடன் S.வீரம்மாள் ஆசிரியை அவர்களது மகள் வழிப் பேத்தியும்,
நிலவை ரவி (எ) ந.ரவீந்திரன் - சு.லீலாவதி அவர்களது
குமாரத்தியுமான திருவளர்ச்செல்வி

**Dr. R. நந்திதா (எ) தீபிகா,** B.D.S.,
Apollo Hospitals, Madurai

ஆகிய இவர்கள் இல்லறம் கண்டு நல்லறம் பேண, இறை சக்தி இசைவுடன் சபையமர் சான்றோர் சான்றுரைக்க அவையமர் ஆன்றோர் ஆமோதிக்க, இளம்வளர் மனம் மகிழ, மங்கல மணவிழா நிகழ்வு, (தமுக்கம் மைதானம் எதிரில்) மதுரை, கோகலே ரோடு, லெட்சுமி சுந்தரம் ஹாலில் **(A/C)** இனிதே நடைபெற உள்ளது. அகம் சால் உறவுகளும், புறம் சால் நட்புகளும் சூழ வருகை தந்து, மங்கல வாழ்த்தொலிக்க, நல்லோர்கள் நல்லாசி வழங்க, மனம் ஒன்றி இரு இல்லத்தாரும் மகிழ்வுடன் இருகரம் சிரமேற் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.



**தங்கள் அன்புள்ள,**

**நிலவை ரவி (எ) ரவீந்திரன்,** M.Com.,
நிறுவனர், நந்தி கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை & NIT IAS ACADEMY, MADURAI.

**சு. லீலாவதி,** B.E.,
உதவி செயற்பொறியாளர், பொ.ப.து, மதுரை.
மாநில துணைத் தலைவர், தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை.
165, பாரதி உலா சாலை, PWD Er. குடியிருப்பு, மதுரை - 2.
செல்: 98656 44542

R. **நந்தகோபால்,** B.E., M.B.A., - P. **செந்தியபிரபா,** B.E., M. Tech.,

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி கிளை உறுப்பினர் பொறியாளர் A.S.நாகராஜன் உ.செ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைச்சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் புதுக்கோட்டை கிளை பொருளாளர் பொறியாளர் K.வெள்ளிமலை உ.செ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



Finance (SRC-1) Department
Secretariat,
Chennai - 9.

**Letter No. 22404 / SRC-1 / 2018-1, Dated: 09.05.2018.**

From
Thiru M.A. Siddique, I.A.S,
Secretary to Government (Expenditure) / (E.O),
Member Secretary, Staff Rationalisation Committee.

To
The Additional Chief Secretaries / Principal Secretaries /
Secretaries to Government,
Departments of Secretariat.The Secretary to Government,
Tamil Nadu Legislative Assembly Secretariat,
Chennai - 600 009.

Sir / Madam,

Sub: Finance Department - Consitution of Staff Rationalisation Committee - Evaluation of Staff Structure - Administrative Expenditure Management in Government departments and Government agencies - Particulars of Posts and Expenditure - Called for - Regarding.

Ref: G.O.(Ms) No. 56, Finance (CMPC) Department, Dated. 19.02.2018.

I invite your attention to the reference cited wherein the Government has constituted a staff Rationalisation Committee to review the staff structure in various department and to identify non-essential posts so as to reduce the revenue expenditure and also to identify the categories of posts which can be outsourced or appointed through contract appointment for an initial period as a measure to control expenditure. The staff Rationalisation Committee is also required to consider any other relevant issue concerning administrative expenditure management in Government and Government agencies and make suitable recommendations.

2. In pursuance of the above, the committee needs information regarding objectives of your department, functional structure, updated consolidated particulars of the posts and revised level of pay with post-wise number of employees and suggestions for curtailing the administrative expenditure.

3. Accordingly, a questionnaire form for furnishing the details required by the Staff Rationalisation Committee has been designed and is being enclosed herewith.

4. I therefore request you to arrange to send a hard copy of the required particulars to the Office of the Staff Rationalisation Committee through a special messenger on or before 21st May, 2018. The soft copies may also be kindly sent to the e-mail ID src_2018@tn.gov.in.

5. Since the Staff Rationalisation Committee is required to submit its report to the Government within six months, it is imperative that the above particulars are sent to the Staff Rationalisation Committee on or before 21st May, 2018. I would be grateful for your kind cooperation in meeting the importance and urgency of the whole excercise and stipulated deadline.

Yours faithfully,
for Secretary to Government (Expenditure) /
(E.O), Member Secretary,
Staff Rationalisation Committee.

## STAFF RATIONALISATION COMMITTEE

## QUESTIONNAIRE TO ADMINISTRATIVE DEPARTMENT AT THE SECRETARIAT

PLEASE PROVIDE BRIEF AND SPECIFIC INFORMATION TO THE FOLLOWING RELATING TO YOUR DEPARTMENT

**PATR - A**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | Name of the Administrative Department | : | | | | | |
| 2. | | The functional structure of the Department as required in Part - B | : | | | | | |
| 3. | | The Heads of Department under your administrative control. | : | | | | | |
| 4. | | No. of sections in your Department | | | | | | |
| 5. | | No. of Tappals received/handled in your Department during the last three calander years. | : | | | | | |
| | | **Subject wise Sections** | : | **2015** | **2016** | **2017** | **Total** | **Average per annum** |
| | a | Establishment and Bills | : | | | | | |
| | b | Budget | : | | | | | |
| | c | Schemes | : | | | | | |
| | d | Others (Please Specify the Category) | : | | | | | |
| | | **Total** | : | | | | | |
| 6 | a | What is your suggestion on improving the present system of examination of subject in files? | : | | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | b | Is it possible to reduce the number of stages through which a file passes before a final decision is taken? | : | |
| | c | Suggest areas where final decision can be taken at lower levels. | : | |
| 7 | | What is your view on single file system where a file emanated from the Head of Department is sent directly to the Secretary to Government for decisions? What are the comparative merits and demerits of the present system and single file system? | : | |
| 8 | | Do you consider that more powers should be given to Administrative Department and Heads of Departments and if so, furnish the areas where such delegation of powers is required? What will be the benefits? | : | |
| 9 | | Whether in your view there is need to improve skills and expertise of employees to function effectively and efficiently. If so, please give your suggestions for improving the present system. | : | |
| 10 | a | Whether Electronic File Management System was introduced in your Department as an e-Governance initiative? | : | |
| | b | What are your views on introducing e-office in your Department? In what way it will increase the efficiency and productivity of your Department? | : | |
| | c | Suggest the areas in your Department where e-office may be indroduced on pilot basis? | : | |
| | d | Any other relevant suggestions for indroducing and sustaining e-office through which transperancy is entertained and accountability is enforced in your Department. | : | |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | | Which are the institutions under your control receiving financial assistance from Government? Should these continue / not continue with reasons. In case of School Education and Higher Education Department, they may make a through examination of aided schools and colleges and suggest ways and means to bring down the financial burden of the Government in terms of Grants - in - aid | : | |
| 12 | a | List out the schemes of your department which are similar in nature to the schemes implemented by any other department. | : | |
| | b | list out those schemes which can be merged (both within the department and with other department schemes) | : | |
| | c | Furnish the schemes which need to be implemented by your department with justification and tenure. | : | |
| | d | List out the schemes with reasons that can be discontinued. | : | |
| 13 | | Suggest the areas where outsourcing or contracting of the work can be encouraged in your department and Head/s of Department/s under your control. | : | |
| 14 | | Importantly, what are your other suggestions for effecting economy in your departmental expenditure under different heads like (a) Administrative Cost (b) Staff Cost (c) Any other area. | : | |
| 15 | | Indicate a Nodal officer and his contact details with e-mail ID from whom further clarification or additional particulars may be obtained | : | |

The Additional Chief Secretary /Principal
Secretary / Secretary to Government.

//TRUE COPY / BY ORDER //

PART - B

PARTICULARS OF EMPLOYEES (Including employees on Special Time Scale of Pay)

(Organisation Chart should also be enclosed)

Name of the Department:

| SL. No | Designation (No abbreviation) | Classification in Service Rules* | | No. of Posts as on 31st March 2018 | | | | | | Level of Pay in Pay Matrix (Scale of Pay) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Sanctioned Posts | | Filled up posts | | Vacant Posts | | |
| | | Class | Category | Permanent | Temporary | Permanent | Temporary | Permanent | Temporary | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

* State and Sub-ordinate service (Special / Adhoc Rules), Service Rules of Common Category (Ministerial / General / General Sub-ordinate / Basic Service) may be indicated seperately.

**CERTIFICATE**

It Is certified that the particulars furnished above are verified and found correct.

The Additional Chief Secretary / Principal Secretary / Secretary to Government

**// TRUE COPY / BY ORDER //**

## அரசு பணியிலிருந்து ஒய்வு பெறுகிறேன்



C.கணபதி, DCE.,B.E., M.E.,
உதவிப் பொறியாளர், பொ.ப.து., (ஓய்வு)
பொபது குடியிருப்பு, சீர்காழி ரோடு,
மயிலாடுதுறை,
செல்: 94439 76402.

**அன்பார்ந்த சகோதர மற்றும் சகோதரி பொறியாளர்களே நண்பர்களே. வணக்கம்!**

நான் பட்டய படிப்பு முடித்தபின் சேலத்தில் உள்ள பொதுப்பணித்துறை கட்டிட பிரிவிலும், டேனிடா பிரிவிலும் 07.07.1982 முதல் 18.05.1985 வரை தினப்பணி தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்தேன்.

பின்னர் சேலம் ஆணை மடுவு நீர் தேக்க பிரிவு புழுதிகுட்டையில் 25.05.1985 முதல் 06.08.1987 வரை பணிபுரிந்தேன். பின்னர் ஒசூர் கெலவரப்பள்ளி நீர்தேக்கம் கோட்டம், ராஜா தோப்புகானர் நீர்தேக்க கோட்டத்தில் 07.08.1987 முதல் 28.04.1991 வரையிலும் பின்னர் கோதையாறு சிறப்பு திட்ட செயலாக்க கோட்டம் நாகர்கோவில் மற்றும் பொருப்பாலூரில் பணிபுரிந்தேன்.

பின்னர் கோதையாறு வடிநிலகோட்டம் நாகர்கோவிலிலும், பின் தாமிரபரணி வடிநில வட்டம் திருநெல்வேலியிலும் பணிபுரிந்தேன். 1998-ல் திருநெல்வேலியில் உள்ள அரசு பொறியில் கல்லூரியில் பட்டப் படிப்பும், 2008-ம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பு பயின்றேன். இந்த நேரத்தில் எனக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களை வணங்கி மகிழ்கிறேன். பகுதிநேர பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயில அனுமதி அளித்த உயர் அலுவலர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். பின்னர் இளம் பொறியாளர்/ உதவிப்பொறியாளர் பதவி உயர்வு பெற்று திருவாரூரில் பணி புரிந்தேன். பின்னர் பணி மாறுதலில் காவிரி வடிநில கோட்டம் மயிலாடுதுறை கட்டுபாட்டில் உள்ள கொள்ளிடம் ஆற்றுப் பாதுகாப்பு பிரிவு, பாசனபிரிவு மணல்மேடு மற்றும் பாசனபிரிவு எண் - IIல் சீர்காழியிலும் பணிபுரிந்து ஒய்வு பெறுகிறேன்.

பட்டயப் படிப்பு, பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு படித்தும் துறையில் சுமார் 36 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக பணிபுரிந்தும் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு வாய்ப்பிருந்தும் மிகவும் சிரமப்பட்டு கிடைக்க விடாமல் செய்த மாற்று சங்கத்தினரின் திறமைக்கு எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். இனியாவது எங்களது வலியை உணர்ந்து ஒரே பதவி உயர்வான உதவிச் செயற்பொறியாளர் பதவியை நியாயமாக எங்களுக்கு கிடைக்கும் வண்ணம் மாற்று சங்கத்தினர் தங்களது செயல்களை சரியான திசைக்கு மாற்றிக் கொள்ள வேண்டுகிறேன்.

நான் 1985லிருந்து 2003 வரை தமிழ்நாடு டிப்ளமா பொறியாளர் சங்கம் மதுரையில் கிளைச்சங்கம் முதல் மாநிலத் தலைவர் வரை உள்ள பொறுப்புகளில் பணிபுரிந்தேன். அந்த வேளையில் 71 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இளம் பொறியாளர் பதவி

உயர்வு ஆணை பெற பாடுபட்டேன். பின்னர் 2003லிருந்து தமிழ்நாடு பொறியியல் சங்கத்தில் கிளைச்சங்கத்தில் தலைவர் முதல் மையச்சங்கத்தில் மாநிலத்தலைவர் வரை சங்கப்பணிகளை மேற்கொண்டேன் என்பதை மகிழ்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பணிகாலத்தில் எனக்கு அனைத்து வகையிலும் உதவிய அனைத்து சகோதர மற்றும் சகோதரி பொறியாளர்களுக்கும், மேல் அலுவலர்கள் மற்றும் அலுவலக நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். எனது உயிர் உள்ள வரை அனைவருக்கும் இயன்ற உதவியை செய்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
(C. கணபதி)

## பொதுப்பணித்துறையில் பணி நிறைவு



லூ.பிலமின் ராஜ், DCE.,
உதவி செயற்பொறியாளர், பொ.ப.து., (ஓய்வு)
C-2, சாகித்யம் அப்பார்ட்மெண்ட்ஸ்,
364/1, சர்ச் ரோடு,
முகப்பேர் கிழக்கு, சென்னை - 600 037.
செல் : 94440 65590.

அன்பார்ந்த சகோதர சகோதரி பொறியாளர்களுக்கு வணக்கம்

150 ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரியம் மிக்க பொதுப்பணித்துறையில் தற்காலிக இளநிலைப் பொறியாளராக 11.08.1982 அன்று புயல் பாதுகாப்பு கோட்டம் பரமக்குடியில் பணியில் சேர்ந்து 1984-1985 தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 31.05.2018-ல் உதவி செயற்பொறியாளராக பொன்னேரியில் பணி நிறைவு செய்துள்ளதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### பொதுப்பணித்துறையில் இதுவரை கடந்து வந்த பாதை:

1. 11.08.1982 முதல் 31.12.1984 முடிய இளநிலைப் பொறியாளராக புயல் பாதுகாப்பு உபகோட்டம் பரமக்குடியில் பணியாற்றுதல்.

2. 01.01.1985 முதல் 15.09.1985 முடிய இளநிலைப் பொறியாளராக கட்டிட கோட்டம் புதுக்கோட்டை கீழ் நாகப்பட்டினத்தில் பணியாற்றுதல்.

3. 16.09.1985 முதல் 10.08.1989 முடிய இளநிலைப் பொறியாளராக முப்பிரிவு கோட்டம் இராமநாதபுரத்தில் பணியாற்றுதல்.

4. 11.08.1989 முதல் 20.10.1995 முடிய இளநிலைப் பொறியாளராக இராமநாதபுரம் முப்பரிவு கோட்டம் விருதுநகர் மற்றும் அயற்பணியாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கோயம்பேட்டில் பணியாற்றுதல்

5. 21.10.1995 முதல் 26.03.1998 முடிய இளநிலைப் பொறியாளராக கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம் கோட்டம் அம்பத்தூரில் பணியாற்றுதல்.

6. 27.03.1998 முதல் 02.09.2004 முடிய இளநிலைப் பொறியாளராக கட்டிட கட்டுமான கோட்டம் - II சேப்பாக்கத்தில் பணியாற்றுதல்.

7. 03.09.2004 முதல் 04.12.2012 முடிய இளநிலைப் பொறியாளராக கட்டிட உபகோட்டம் செங்கல்பட்டில் பணியாற்றுதல்.

8. 05.12.2012 முதல் 03.03.2014 முடிய உதவி செயற்பொறியாளராக (நேர்முக உதவியாளராக) கட்டிட கட்டுமானம் கோட்டம் வேலூரில் பணியாற்றுதல்.

9. 04.03.2014 முதல் 22.09.2015 முடிய உதவி செயற்பொறியாளராக கட்டிட கட்டுமான உபகோட்டம் திருப்பெரும்புதூரில் பணியாற்றுதல்.

10. 23.09.2015 முதல் 31.05.2018 முடிய உதவி செயற்பொறியாளராக கட்டிட கட்டுமானம் (ம) பராமரிப்பு உபகோட்டம் பொன்னேரியில் பணியாற்றுதல்

**சங்க ஈடுபாடு:**

1. 1986 முதல் 1988 முடிய இராமநாதபுரம் கிளையின் இணைச் செயலாளர் மற்றும் செயலாளராக பணிபுரிதல்.

2. 1989 முதல் 1991 முடிய விருதுநகர் கிளையின் செயலாளராக பணிபுரிதல்.

3. 1998 முதல் 2003 முடிய சென்னை கிளையின் இணைச் செயலாளராக பணிபுரிதல்.

4. 2005 முதல் 2011 முடிய காஞ்சிபுரம் கிளையின் இணைச் செயலாளராக பணிபுரிதல்

5. 2015 முதல் 2018 முடிய காஞ்சிபுரம் கிளையின் தலைவர் மற்றும் மண்டல (வடக்கு) செயலாளராக பணிபுரிதல்

நான் இந்த நேரத்தில் பட்டயப் பொறியாளருக்காக தமிழ்நாடு பொறியியல் சங்கம் நடத்திய பல்வேறு போராட்டங்கள், அந்த போராட்டங்களில் ஈடுபாட்டுடன் கலந்து கொண்டுள்ளேன் என்பதில் மன நிறைவடைகிறேன்.

தங்கள் அன்புள்ள,
(லூர்.பிலமின் ராஜ்)

**பணி நிறைவு**



பொறி. கா.வெள்ளிமலை
உதவி செயற்பொறியாளர், பொ.ப.து., (ஓய்வு)
No. 73/36, காந்திநகர் முதல் வீதி,
புதுக்கோட்டை - 622 001.
செல்: 94421 25532

அன்பிற்கினிய சகோதர, சகோதரி பொறியாளர்களுக்கு வணக்கம்

150 ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரியமிக்க பொதுப்பணித்துறையில் 04.12.1982ல் தொழில்நுட்ப பயிற்சியாளராக (Technician Apprentice) பணியில் சேர்ந்து பிற்காலங்களில் தொழில்நுட்ப உதவியாளர், இளம் பொறியாளர் மற்றும் உதவி

செயற்பொறியாளராக பணியாற்றி 31.05.2018ல் எனது பணியினை நிறைவு செய்கிறேன்.

## பணியாற்றிய விபரங்கள்

1. 04.12.1982 முதல் 03.12.1983 வரை: தொழில்நுட்ப பயிற்சியாளர், பொபது (Technician Apprentice) கட்டிட உபகோட்டம், கும்பகோணம்.
2. 14.12.1984 முதல் 31.05.1986 வரை: தொழில்நுட்ப உதவியாளர் (NMR) பொபது, கட்டிட உபகோட்டம், கும்பகோணம்.

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தால் (TNPSC) நடத்தப்பட்ட நேரடித் தேர்வு (1984-85) மூலம் இளம் பொறியாளராக தேர்வு செய்யப்பட்தையடுத்து பணிநியமனம் பெற்று 29.07.1986ல் பணியில் சேர்தல்.

3. 29.07.1986 முதல் 31.10.1990 வரை: இளம் பொறியாளர், பொபது ஏரிகள் நவீனப்படுத்தும் உபகோட்டம், கமுதி.
4. 01.11.1990 முதல் 31.05.1991 வரை: இளம் பொறியாளர், பொபது ஏரிகள் நவீனப்படுத்தும் உபகோட்டம், முதுகுளத்தூர்.
5. 01.06.1991 முதல் 30.05.1992 வரை: இளம் பொறியாளர், பொபது ஏரிகள் நவீனப்படுத்தும் உபகோட்டம், சிவகங்கை.
6. 31.05.1992 முதல் 17.07.1995 வரை: இளம் பொறியாளர், பொபது ஏரிகள் நவீனப்படுத்தும் உபகோட்டம், விராலிமலை.
7. 18.07.1995 முதல் 30.06.1997 வரை: இளம் பொறியாளர், பொபது ஏரிகள் நவீனப்படுத்தும் உபகோட்டம், புதுக்கோட்டை.
8. 01.07.1997 முதல் 30.06.2000 வரை: இளம் பொறியாளர், பொபது நிலநீர் உபகோட்டம், திருச்சி.
9. 01.07.2000 முதல் 31.12.2004 வரை: இளம் பொறியாளர், பொபது நீரியல் உபகோட்டம், புதுக்கோட்டை.
10. 01.01.2005 முதல் 23.06.2009 வரை: இளம் பொறியாளர், பொபது நீரியல் உபகோட்டம், தஞ்சாவூர்.
11. 24.06.2009 முதல் 20.11.2011 வரை: உதவி செயற்பொறியாளர், பொபது நீரியல் உபகோட்டம், தஞ்சாவூர்.
12. 21.11.2011 முதல் 11.06.20117 வரை: உதவி செயற்பொறியாளர், பொபது திட்டம் & வடிவமைப்பு உபகோட்டம், புதுக்கோட்டை.

13. 12.06.2017 முதல் 31.05.2018 வரை: உதவி செயற்பொறியாளர், பொபது திட்டம் & வடிவமைப்பு உபகோட்டம், பட்டுக் கோட்டையில் பணியினை நிறைவு செய்தல்.

**சங்க ஈடுபாடு :**

நான் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு பணியிருந்து ஓய்வு பெறும் வரை புதுக்கோட்டை கிளையின் பொருளாளராக பணியாற்றியுள்ளேன். சங்கத்தின் மாதாந்திர இதழான பொறியியல் கதிரில் சங்கத்தின் சிறப்புகள் மற்றும் பல்வேறு தலைப்புகளில் கவிதைகள் எழுதுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரம்பரியமிக்க நமது சங்கத்தின் நூற்றாண்டு விழா மலரில் மேதகு முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் APJ அப்துல்கலாம் அவர்களை பாராட்டி போற்றும் விதமாக பெருமைப்படுத்தி எழுதிய கவிதை மற்றும் சங்கத்தின் சாதனைகள் பற்றிய கவிதைகளை வெளியிட்டு இதன் பொருட்டு கௌரவிக்கப்பட்டதற்கு மீண்டும் எனது நன்றியினை சங்கத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இனிவரும் காலங்களில் நம் சங்கத்தின் வளர்ச்சிக்கு என் வாழ்நாள் முழுவதும் என்னுடைய ஒத்துழைப்பு தொடர்ந்து கொண்டே இருக்கும்.

எனது பணிக்காலத்தில் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய, ஊக்குவித்து வழிகாட்டிய அனைத்து தரப்பு பொறியாளர்களுக்கும், அலுவலக நண்பர்களுக்கும், சங்க பொறுப்பாளர்கள் மற்றும் மூத்தப் பொறியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க பொறியியல் சங்கம்!
ஓங்குக பொறியாளர் ஒற்றுமை!

என்றும் தங்கள் அன்புள்ள
கா.வெள்ளிமலை
உதவி செயற்பொறியாளர், பொபது (ஓய்வு)

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோவை - பொள்ளாச்சி கிளையின் முன்னாள் செயலாளர் பொறியாளர் S.ராஜன்பிரேம்குமார் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 11.05.2018 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் G.குருபாக்கியம் உதவிப் பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி G.சீதாலட்சுமி (வயது 74) அவர்கள் 18.05.2018 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை உறுப்பினர் பொறியாளர் R.வெங்கட்ரமணன் இளம் பொறியாளர் அவர்களின் தாயார் இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொறியாளர் C.கணபதி அவர்களுக்கு பணிஓய்வு பாராட்டு



## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2018 /நாள் 31.05.2018ன் படி 31.05.2018 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | P. சண்முகநாதன் | 03.05.1960 | ஆட்சி அலுவலர் |
| 2. | S. ஆண்டியப்பன் | 19.05.1960 | ஆட்சி அலுவலர் |
| 3. | C. அசோக்குமார் | 10.05.1960 | ஆட்சி அலுவலர் |
| 4. | R.S. ராஜன் | 03.05.1960 | ஆட்சி அலுவலர் |
| 5. | N. முனிசாமி | 25.05.1960 | ஆட்சி அலுவலர் |
| 6. | S. அனந்தராமகிருஷ்ணன் | 15.05.1960 | உதவிப் பொறியாளர் (மின்) |
| 7. | C. கணபதி | 15.05.1960 | உதவிப் பொறியாளர் |
| 8. | G. சிவசண்முகம் | 12.05.1960 | உதவிப் பொறியாளர் |
| 9. | A.P. ஜெயராஜன் | 25.05.1960 | இளம் பொறியாளர் |
| 10. | G. ஐயப்பன் | 14.05.1960 | இளம் பொறியாளர் |
| 11. | P. கணேசன் | 15.05.1960 | இளம் பொறியாளர் |
| 12. | T. நாகரத்தினம் | 18.05.1960 | இளம் பொறியாளர் |
| 13. | M. அசோகன் | 25.05.1960 | இளம் பொறியாளர் (மின்) |

**ஒம்/- ம.பக்தவத்சலம்**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும்**
**(ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொபது**

# விவாஹ சுபமுஹூர்த்தப் பத்திரிகை

மஹா ராஜ ராஜ ஸ்ரீ............................................................ அவர்களுக்கு

அநேக நமஸ்காரம் / ஆசீர்வாதம் / உபயகுசலோபரி

ஸ்ரீமத் பகவத் கிருபையை முன்னிட்டு நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ விளம்பி வருஷம் ஆனி மாதம் 18-ம் தேதி (02.07.2018) திங்கட்கிழமை சதுர்த்தி ஸ்ரவிஷ்டா நக்ஷத்ரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி 7.30 நாழிகைக்குமேல் 11.30 நாழிகைக்குள் **(காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள்)** சிம்ம லக்னத்தில்

திருவண்ணாமலை ஸ்ரீ A.சேதுராம அய்யர் - S.திரிபுரசுந்தரி அவர்களின் பௌத்திரனும், சேலம் ஸ்வர்கீய ஸ்ரீ U.வெங்கட்ரமண அய்யர் - ஸ்வர்கீய V.பொன்னம்மாள் அவர்களின் தௌஹித்திரனும், திருவண்ணாமலை ஸ்வர்கீய ஸ்ரீ S.இரமேஷ் - V.சொர்ணா அவர்களின் குமாரன்

சிரஞ்சீவி. **R. அரவிந்த் (எ) அருணாசலசர்மா**

என்கிற வரனுக்கு

சேலம் ஸ்வர்கீய ஸ்ரீ S.இராமமூர்த்தி அய்யர் - R.சரஸ்வதி அவர்களின் பௌத்திரியும், மயிலாடுதுறை, ஸ்வர்கீய ஸ்ரீ A.K. ஜெயராம அய்யர் - ஸ்வர்கீய J.ஜானகி அவர்களின் தௌஹித்ரியும், சேலம் ஸ்ரீ R.ரவி (எ) சுப்ரமணிய அய்யர் - J.லக்ஷ்மி அவர்களின் குமாரத்தி

சௌபாக்யவதி **R.L.சரண்யா**

என்கிற வதுவை

பாணிக்ரஹணம் செய்து கொள்வதாய், முட்டத்தூர் ஸ்ரீபெரியாண்டவர் அனுக்ரஹத்தினாலும், ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் அனுக்ரஹத்தை முன்னிட்டும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, மேற்படி சுபமுஹூர்த்தம், சேலம் - 7, காந்தி ரோடு, நெ.14-A, **T.V.N. கல்யாண மண்டபத்தில்** நடக்கிறபடியால் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் முன்னதாகவே வந்திருந்து சுபமுஹூர்த்தத்தை நடத்திக் கொடுத்து, தம்பதிகளை ஆசீர்வதித்து, எங்களையும் கௌரவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
தங்கள் விதேயன்
**A. சேதுராம அய்யர்**
**V. சொர்ணா இரமேஷ்**
உதவிப் பொறியாளர், காஞ்சிபுரம்.
பிளாட் எண். 4, ஐய்வர்யம் அபார்ட்மெண்ட்
SH-7, பல்லவன் நகர், காஞ்சிபுரம் - 632 501.
செல்: 94424 10365.

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்! வணக்கம்

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான விளம்பி வருஷம் **ஆனி மாதம் 11ம் தேதி (25.06.2018) திங்கட்கிழமை சுக்கில பட்சம், அனுஷ நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில்** காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் கடக லக்கினத்தில்

திருச்சி மாவட்டம், துறையூர் தெய்வத்திரு. சீனிவாசலு நாயுடு - செல்லம்மாள்
அவர்களின் பௌத்திரனும், வேலூர், சத்துவாச்சாரி பகுதி - 4,
திரு S.கண்ணன் நாயுடு - லேட்.சாந்தி தம்பதியரின் குமாரனுமான

செல்வன். **K. விஜய்,** B.E.,

(Senior Quality Engineer, M/s Diamond Buckets Industries, Bangalore)

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வடக்கு திட்டங்குளம்
தெய்வத்திரு. சுப்பையா நாயுடு - திருமதி. சுப்புலட்சுமி அவர்களின் பௌத்திரியும்
லேட். S.P.M. பாரதி நாயுடு - திருமதி. கங்கா பரமேஸ்வரி தம்பதியரின்
குமாரத்தியுமான

செல்வி. **B.சூரியா,** M.E.,

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம், மேற்படி சுபமுகூர்த்தம் வேலூர், அலுலேமங்காபுரம், தமிழ்நாடு போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் எதிரில் உள்ள **G.S. மஹாலில்** நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்...

தங்கள் அன்புள்ள,

**S. கண்ணன் நாயுடு - ரேவதி**
உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (ஓய்வு),
வேலூர்.

**புஷ்பாபாய் குப்புராஜீலு நாயுடு**
சென்னை.

**S. வெங்கடேசலு நாயுடு - லட்சுமி.**
திருச்சி.

தங்கள் வரவை அன்புடன் எதிர்நோக்கும்

R.செந்தில் ரமணன் DEEE., B.A., - அனிதா செந்தில் ரமணன் M.Sc., M.Ed., M.Phil.,
K.R.ரமேஷ் B.E., B.ராம்பிரசாத் CA., குட்டீஸ்: அமிர்தவர்ஷினி, ஓம் பிரணவ்.


## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்











# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஆனி மாதம் 24 ஆம் நாள் (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியிலிருந்து 8.00 மணிக்குள்

பழனி கரிக்காரன்புதூர் இராமகிருஷ்ணன் - முத்தம்மாள்
ஒட்டன்சத்திரம் நாகணம்பட்டி கந்தசாமி - கண்ணு ஆகியோரது பேரனும்,
எங்களது மகனுமான

**செல்வன் ச. புகழேந்தி, பி.இ.,**

மென்பொறியாளர், விப்ரோ, பிரேசில்

நெல்லை மாவட்டம், பரன்குன்றாபுரம் மா.பால் - மணியம்மாள்
(லேட்) சாத்தூர் சின்னையாபுரம் எஸ்.ஜேம்ஸ் - ஜெயம் ஆகியோரது பேத்தியும்,
மா.சுப்பிரமணியன் - ஜே.கலா ஆகியோரது மகளுமான

**செல்வி சு. திவ்யபிரியா, பி.இ., எம்.பி.ஏ.,**

ஆகியோரது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, சென்னை, வேப்பேரி, ரித்தர்டன் சாலையில் உள்ள ஒய்எம்சிஏ அரங்கில் (**YMCA MADRAS,** 6/74, Ritherdon Road, Vepery, Chennai - 600 007) நடைபெற உள்ளது. இந்த திருமண நிகழ்வை **பேராசிரியர் சொல்லாய்வறிஞர் அருளியார்** அவர்கள் தலைமையேற்று தமிழ் நெறிப்படி நடத்தி வைக்க உள்ளார். இவ்வினிய விழாவில் தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்திட அன்புடன் அழைக்கிறோம்.

**தாங்கள் அன்புள்ள,**

**இரா. சக்திவேல்,** ஆசிரியர், தங்கமங்கை,
தலைவர், தமிழ்நாடு ஊடகவியலாளர் சங்கம்,
தமிழ்நாடு இதழ்கள் வெளியீட்டாளர் சங்கம்,



**க. ஆதிசெல்வி,** டி.சி.இ.,
இளநிலைப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
அரும்பாக்கம், பிரிவு.
இணைச்செயலாளர், தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சென்னை கிளை.

**ச. தமிழரசன்,** பி.இ.,
கைபேசி: 98401 13329

திருமண வரவேற்பு: 07-07-2018, மாலை 7.00 மணி முதல் 9.00 மணிக்குள்
ஒய்எம்சிஏ அரங்கில் நடைபெறும்

Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

JUNE 2018

தமிழ்நாடு பொறியியல் சங்கம் முன்னாள் மண்டல செயலாளர் காஞ்சிபுரம் கிளைத் தலைவர் பொறியாளர் ட.பிலோமின்ராஜ் உ.செ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Posted on
09.06.2018

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,